மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், இலால்குடி.

முன்னிலை: **திரு. செ. ராஜ்குமார், B.A.B.L.,**

மாவட்ட உரிமையியல் நீதிபதி, இலால்குடி.

2024–ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 26–ம் நாள் வெள்ளிகிழமை

**இ.ம.எண்.02/2022 in அ.வ.எண்.389/2022**

1. கலாராணி
2. சாந்தி ....... மனுதாரர்கள்/வாதிகள்

/எதிராக/

1. உலகநாதன்
2. சுலோச்சனா
3. நித்யா ........ எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு என் முன்பு 03.04.2024–ம் தேதியன்று இறுதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.SR.செந்தில்குமார் அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.V.ராஜசேகர் அவர்கள் முன்னிலையாகியும், இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்து, இருதரப்பு வாதுரையையும், சான்றாவணங்களையும் பரிசீலனை செய்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும் .......

**<u>உ த் த ர வு</u>**

**1.** மனு சொத்தினை, மனுதாரர்கள் அமைதியான முறையில் அனுபவித்துவருவதற்கு, எதிர்மனுதாரர்களோ, அவர்களது ஆட்களோ மனு சொத்தில் அத்துமீறி நுழைந்து ஆடுமாடுகள் கட்ட எத்தணிப்பதன் மூலமோ, மனு சொத்திலுள்ள கட்டுமான பொருட்களை சேதப்படுத்துவதன் மூலமோ, மனு சொத்திலுள்ள வீட்டில் அத்துமீறி நுழைந்து ஆக்கிரமிக்க எத்தணிப்பதன் மூலமோ, வேறு எவ்வகையிலும் இடைஞ்சலும், தடங்கலும்

செய்யக்கூடாது என்று இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி மனுதாரர்கள் உரிமையியல் நடைமுறை சட்டம் வகுமுறை 39, விதி 1, 2 மற்றும் பிரிவு 151–ன் கீழ் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்.

**<u>2. 1ம் மனுதாரர்/1ம் வாதி தரப்பு பிரமாணவாக்குமூலத்தின் சுருக்கம்:–</u>**

2.1) மனுதாரர் தனக்காகவும், 2ம் மனுதாரர் சார்பிலும் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார். மனுதாரர்கள், எதிர்மனுதாரர்களுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி அசல் வழக்கை தாக்கல் செய்துள்ளனர்.

2.2) மனு சொத்துக்கள் மனுதாரர்களின் தகப்பனார் பாலசுப்பிரமணியன் அவர்களுக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களாகும். பாலசுப்பிரமணியன்–லெட்சுமி தம்பதியினருக்கு மனுதாரர்கள் மற்றும் 1ம் எதிர்மனுதாரர் ஆகியோர் வாரிசுகள் ஆவார்கள். 2 முதல் 3 எதிர்மனுதாரர்கள், 1ம் எதிர்மனுதாரரின் மனைவி மற்றும் மகளாவார்கள். 1ம் எதிர்மனுதாரர், அவரது பெற்றோர்களை பராமரிக்காமல் விட்டதால், மனுதாரர்கள், பாலசுப்பிரமணியனுக்கு மகள் என்ற அடிப்படையில் பராமரித்து வந்ததால், பாலசுப்பிரமணியன் மனு 1,2 அயிட்ட சொத்துக்களை பொறுத்து கடந்த 15.06.1994–ம் தேதி பதிவு செய்யப்பட்ட உயில் ஆவணம் மூலம் மனுதாரர்களுக்கு எழுதிக்கொடுத்துள்ளார். மனு சொத்திலுள்ள வீட்டிற்கு வீட்டுவரி வகையறாக்களை மனுதாரர்களின் தந்தை பெயரில் செலுத்தி அனுபவம் செய்து வருகிறார்கள்.

2.3) மேலும் பாலசுப்பிரமணியன் தனது வாழ்நாளில் மனு சொத்துக்களை பொறுத்து மனுதாரர்களின் பெயருக்கு கடந்த 19.12.2018ம் தேதி பதிவு செய்யப்பட்ட தான செட்டில்மெண்ட் பத்திரம் ஒன்றை எழுதிக் கொடுத்துள்ளனர். அன்றிலிருந்து மனு 1,2 அயிட்ட சொத்துக்களிலுள்ள

வீட்டில் தனது பெற்றோர்களுடன் குடியிருந்தும், மனு 3வது அயிட்ட சொத்திலுள்ள காலிமனை பகுதியில் ஆடு, மாடுகள் கட்டியும், வைக்கோல் போர் போட்டும், குப்பை குழி அமைத்தும், ஒரு பகுதியில் வீட்டு உபயோகப்பொருட்களான விறகு போட்டும் அனுபவம் செய்து வருவதை அனுசரித்து மனுதாரர்களின் பெயருக்கு மண்ணச்சநல்லூர் வட்டாட்சியர் அவர்களால் பட்டா வழங்கப்பட்டுள்ளது.

2.4) மனுதாரர்களின் தந்தையான பாலசுப்பிரமணியன், மனுதாரர்களுக்கு பத்திரப்பதிவு செய்து கொடுத்துள்ள விவரம் தெரிந்தும், மனுதாரர்கள் மனு சொத்தை அனுபவிக்க கூடாது என்ற கெட்ட எண்ணத்தில் கடந்த 15.10.2022–ம் தேதி மனு சொத்திலுள்ள வீட்டிற்கு செல்லும் வழியில் எதிர்மனுதாரர்கள், மாட்டு சாணம், குப்பைகளை கொட்டியும், கழிவறைக்கு சென்று வரும் வழியை மறித்து எதிர்மனுதாரர்களின் மாட்டினை வழியிலேயே அத்துமீறி கட்டியதில் அந்த மாடு உடல்நிலை சரியில்லாத மனுதாரரின் தாயாரை முட்டியதில், அவர் கீழே விழுந்துள்ளார். பின்பு எதிர்மனுதாரர்கள், மனு சொத்தில் அடுக்கி வைத்துள்ள ஓடுகளையும், ஆஸ்பெட்டாஸ் கூரையினையும் அடித்து உடைக்கவும், 1,2 அயிட்ட மனு சொத்துக்களிலுள்ள வீட்டின் கதவை உடைக்கவும் எத்தணித்ததால், எதிர்மனுதாரர்களின் அத்துமீறிய செயலை கண்டிக்கும்விதமாக, மனுதாரர், எதிர்மனுதாரர்கள் மீது மண்ணச்சநல்லூர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளனர். எதிர்மனுதாரர்கள் ஆள்பலம் மிக்கவர்கள் என்பதால் மனுசொத்தில் அத்துமீறி நுழைந்து ஆக்கிரமிப்பு செய்ய எந்நேரமும் முற்படலாம் என்பதால் மனுதாரர்கள், எதிர்மனுதாரர்களுக்கு எதிராக இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி இம்மனுவை தாக்கல் செய்துள்ளனர்.

**3. 1ம் எதிர்மனுதாரர் தரப்பு எதிருரையின் சுருக்கம்:-**
**(இவ்வெதிர்வுரையை 2,3 எதிர்மனுதாரர்கள் ஒத்தேற்பு செய்துள்ளனர்)**

3.1) மனுவில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகளில் இவ்வெதிர்மனுதாரர் குறிப்பாக ஒப்புக்கொண்டவற்றை தவிர மற்ற அனைத்து சங்கதிகளையும் மனுதாரரே நிரூபிக்கக் கடமைப்பட்டவர் ஆவார். இம்மனு சட்டப்படிக்கும், பொருண்மைப்படிக்கும் நிலைக்கத்தக்கதல்ல.

3.2) மனு 1வது அயிட்ட சொத்தில் மனுதாரர்களும், அவர்களது தகப்பனார் பாலசுப்பிரமணியனும் குடியிருக்கவில்லை. உண்மையில் 1வது அயிட்ட சொத்தில் 1ம் எதிர்மனுதாரர் தனது குடும்பத்தாருடன் ஆஸ்பெட்டாஸ் சீட் போட்ட வீட்டில் இன்றுவரை வசித்து வந்து, அதற்கான வீட்டுவரி ரசீதுகளை செலுத்து வருகின்றனர். 1ம் மனுதாரர், அவரது கணவருடன் ஏற்பட்ட பிரச்சினை காரணமாக திருப்பூரில் தங்கி வேலை பார்த்து வருகிறார். திருப்பூரிலிருந்து ஊருக்கும் வரும்போது, மனுதாரரின் மகன் குடியிருந்து வரும் குமரகுடி கிராமத்திலிருக்கும் வீட்டில் தான் தங்கி இருப்பார் என்ற உண்மைகளை மறைத்து மனு 1வது அயிட்ட சொத்தின் அனுபோகத்தில் மனுதாரர்கள் குடியிருப்பதாக கூறுவது பொய்யான சங்கதியாகும்.

3.3) 1ம் எதிர்மனுதாரர் மாடுகள் வைத்து பால் வியாபாரம் செய்வதால் 3வது அயிட்ட சொத்தில் 1ம் எதிர்மனுதாரரின் மாடுகள் மற்றும் அவரது வைக்கோல் போர்களே உள்ளது. ஆனால் மனுதாரர் இந்த விவரங்களை மறைத்து பொய்யான தகவல்களை இந்நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளார். மனு சொத்துக்கள் மனுதாரர்கள் மற்றும் 1ம் எதிர்மனுதாரரின் மூதாதையர்கள் வழிவகை சொத்துக்களாகும்.

3.4) ஆனால் மனுதாரர்களின் தகப்பனார் பாலசுப்பிரமணியன் காலப்போக்கில் தனது வசதிக்காக மனு சொத்துக்களிலுள்ள 1 மற்றும் 3 வது அயிட்ட சொத்துக்களை அவரது பெயருக்கு தனிப்பட்டாவாக மாற்றிக்கொண்டுள்ளார். அதன் பின்னர் மீதமுள்ள ஒரு சொத்தை அவர் பெயருக்கு பட்டா மாற்ற முடியாமல் இன்றுவரை அது மனுதாரர் மற்றும் 1 ம் எதிர்மனுதாரரின் தாத்தா சின்னையன் பெயரிலேயே உள்ளது. மேலும் மனுசொத்தில் உள்ள பிரதிவாதியை வெளியேற்ற வேண்டும் என்பதற்காகவே மனுதாரர்களும், அவர்களின் தகப்பனாரும் சேர்ந்து அவசரமாக இந்த வழக்கை தாக்கல் செய்தள்ளதாலும், 1 மற்றும் 3 அயிட்ட மனுசொத்துக்களை மனுதாரர்கள் எந்த காலத்திலும் குடியிருக்கவில்லை என்றும், 2 வது அயிட்ட சொத்தில் 2 ம் மனுதாரரின் குடும்பமும் அவரது பெற்றோர்களான பாலசுப்ரமணியன்–லெட்சுமி ஆகியோர் வசித்து வருவது உண்மை என்றும், 1, 3 அயிட்ட சொத்துகளில் முழு அனுபோக உரிமையும் எதிர்மனுதாரர்களுக்கே உள்ளதால் இம்மனுவை செலவு தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4) இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை யாதெனில், இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதாகும்.

**<u>இருதரப்பும் கேட்கப்பட்டது.</u>**

5) மனுதாரர்கள் தரப்பில் ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.22 வரையிலான சான்றாவணங்களும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் எ.ம.சா.ஆ.1 முதல் எ.ம.சா.ஆ.7 வரையிலான சான்றாவணங்களும் குறியீடு செய்யப்பட்டுள்ளன. இருதரப்பிலும் சாட்சிகள் யாரையும் விசாரிக்கவில்லை.

6) மனு, எதிருரை மற்றும் வழக்காவணங்களை பரிசீலனை செய்ததில், அசல் வழக்கானது எதிர்மனுதாரர்களுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்யப்பட்டு, விசாரணைக்காக நிலுவையில் இருந்து வருகிறது.

7) மனு 1 முதல் 3 அயிட்ட சொத்துக்களானது மனுதாரர்களின் தகப்பனார் பாலசுப்ரமணியன் பெயரில் பட்டா ஏற்பட்டதற்கான ஆவணங்கள் ம.சா.ஆ.5 முதல் ம.சா.ஆ.7 வரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேலும் மனுசொத்துக்களை பொருத்து மனுதாரர்களுக்கு 15.06.1994 ம் வருடம் ம.சா.ஆ.8 உயில் ஆவணத்தை மனுதாரர்களின் தகப்பனார் ஏற்படுத்தியுள்ளார். மனுசொத்திற்கு மனுதாரரின் தகப்பனார் பாலசுப்ரமணியன் பெயரில் 1ம் மனுதாரர் வரி வகையறாக்களை செலுத்தி வந்ததாக ம.சா.ஆ.9 முதல் ம.சா.ஆ.10 தாக்கல் செய்யப்பட்டுள்ளது. பின்னிட்டு, மனுதாரர்களின் தகப்பனார் மனுதாரர்களுக்கு 19.12.2018 ம் தேதியன்று பதிவு செய்யப்பட்ட தான செட்டில்மெண்ட் ஆவணம் ம.சா.ஆ.12 ன் மூலம் மனு சொத்துக்களை பாத்தியப்படுத்தியுள்ளார்.

8) பின்னிட்டு மனுசொத்துக்களானது ம.சா.ஆ.13 முதல் ம.சா.ஆ.15 பட்டா ஆவணங்களின் வாயிலாக மனுதாரர்களின் பெயரில் ஏற்பட்டுள்ளதற்கான ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. பின்னிட்டு மனுதாரர்களின் பெயரிலும், மனுதாரர்களின் தகப்பனார் பெயரிலும் வரி வகையறாக்கள் மற்றும் மின்கட்டணம் செலுத்தியதற்கான ரசீதுகள் ம.சா.ஆ.16 முதல் ம.சா.ஆ.19 வரையிலான ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

9) மேலும் மனுசொத்தில் மனுதாரர்கள் வசித்து வருவதற்கான அடையாள அட்டை ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.4 தாக்கல் செய்யப்பட்டுள்ளதோடு, மனுதாரர்களின் சுவாதீனத்திற்கு இடையூறு ஏற்படுத்தி வந்ததாக எதிர்மனுதாரர்கள் மீது புகார் கொடுத்துள்ளதாக ம.சா.ஆ.22 புகாரின் நகல் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி சான்றாவணங்களிலிருந்து மனுதாரர்களின் தகப்பனாருக்கு பாத்தியப்பட்ட சொத்தை ம.சா.ஆ.12 தான செட்டில்மெண்ட் ஆவணத்தின் மூலம் மனுதாரர்களுக்கு பாத்தியப்படுத்தி அதன் அடிப்படையில் மனுதாரர்கள் மனு சொத்தின் சுவாதீனத்திலிருந்து வருவாய் ஆவணங்களில் பெயர் மாற்றம் செய்து வரி வகையறாக்களை செலுத்தி அனுபவம் செய்து வருவதாக நிரூபணம் செய்யப்பட்டுள்ளது.

10) இருந்தபோதிலும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் 2வது அயிட்ட சொத்தில் 2ம் மனுதாரர் இருந்து வருவதாக ஒப்புக்கொண்டுள்ளார். ஆனால் 1 மற்றும் 3 அயிட்ட சொத்துக்களில் எதிர்மனுதாரர்கள் தான் அனுபவம் செய்து வருவதாக கட்சி செய்திருந்தாலும், மனு சொத்தில் சுவாதீனம் இருந்த வருவதற்கான சான்றாவணங்கள் எதையும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்படவில்லை.

11) மேலும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் 1ம் எதிர்மனுதாரர் வரி வகையறாக்களை செலுத்தி வருவதாக எ.ம.சா.ஆ 2 ஆவணங்களை தாக்கல் செய்திருந்தாலும், மனு சொத்தின் உரிமை மூல ஆவணங்கள் மனுதாரர்களின் பெயரில் தான் ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேலும் மனு சொத்தில் எதிர்மனுதாரர்கள் தான் அனுபவ சுவாதீனத்தில் இருந்துவருவதாக புகைப்படத்துடன் கூடிய குறுந்தகடு எ.ம.சா.ஆ.1 மற்றும் எ.ம.சா.ஆ.4 ஆகியவற்றை தாக்கல் செய்திருந்தாலும், மேற்படி

ஆவணங்கள் மனுசொத்திற்கானது தானா என்பது குறித்து அதை உறுதி செய்யும் வகையில் வேறு எந்த ஆவணமும் முன்னிலைப்படுத்தவில்லை,

12) மேலும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எ.ம.சா.ஆ.5 ஆவணமானது மனுதாரர்களின் பெயரில் தான் ஏற்பட்டுள்ளது என்பதோடு, எதிர்மனுதாரர்கள் மீது மனுதாரர்கள் புகார் கொடுத்து நடவடிக்கை கைவிடப்பட்டதற்கான ஆவணங்கள் எ.ம.சா.ஆ.6 மற்றும் எ.ம.சா.ஆ.7 தாக்கல் செய்யப்பட்டதிலிருந்து மனுதாரர்கள் தான் எதிர்மனுதாரர்கள் மீது புகார் கொடுத்துள்ளது நிரூபணமாகியுள்ளது.

13) ஆகவே மேற்படி சான்றாவணங்களிலிருந்து மனுதாரர்கள் தான் மனுசொத்தில் சுவாதீனத்திலிருந்து அனுபவம் செய்து வருவதோடு, மனுதாரர்களின் சுவாதீனத்திற்கு எதிர்மனுதாரர்கள் இடையூறு செய்து வருவது நிரூபணம் செய்யப்பட்டுள்ளதால், மனுதாரர்கள் கோரிய இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் மனுதாரர்களுக்கு கிடைக்கதக்கது என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**14) முடிவாக,**

இம்மனு அனுமதிக்கப்படுகிறது. செலவு தொகை இல்லை.

இந்த உத்தரவானது இன்று 26.04.2024-ம் தேதியன்று என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின்பு என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

ஒப்பம்/-செ.ராஜ்குமார்.
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
இலால்குடி.

**மனுதாரர் தரப்பில் சாட்சிகள் :–** இல்லை.

**மனுதாரர் தரப்பில் சான்றாவணங்கள் :–**

| வ.எண் | தேதி | ஆவணங்களின் விவரம் | குறிப்பு |
|---|---|---|---|
| ம.சா.ஆ.1 | – | 1ம் மனுதாரரின் ஆதார் அட்டை | அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்ட நகல் |
| ம.சா.ஆ.2 | – | 1ம் மனுதாரரின் குடும்ப அட்டை | அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்ட நகல் |
| ம.சா.ஆ.3 | – | 1ம் மனுதாரரின் வாக்காளர் அடையாள அட்டை | அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்ட நகல் |
| ம.சா.ஆ.4 | – | 2ம் மனுதாரரின் ஆதார் அட்டை | அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்ட நகல் |
| ம.சா.ஆ.5 | 01.09.2017 | தனி பட்டா எண்.212 | அசல் |
| ம.சா.ஆ.6 | 01.09.2017 | தனி பட்டா எண்.477 | அசல் |
| ம.சா.ஆ.7 | 21.08.2018 | நத்தம் தனி பட்டா எண்.554 | அசல் |
| ம.சா.ஆ.8 | 15.06.1994 | உயில் பத்திரம் | உண்மை நகல் |
| ம.சா.ஆ.9 | 27.03.1999 | வீட்டுவரி ரசீது | அசல் |
| ம.சா.ஆ.10 | 30.03.2015 | பல்வகை வரவு ரசீது | அசல் |
| ம.சா.ஆ.11 | – | மின்கட்டண அட்டை | அசல் |
| ம.சா.ஆ.12 | 19.12.2018 | தான செட்டில்மெண்ட் பத்திரம் | சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ.13 | 08.04.2022 | கூட்டு பட்டா எண்.212 | அசல் |
| ம.சா.ஆ.14 | 08.04.2022 | கூட்டு பட்டா எண்.447 | அசல் |

| | | | |
|---|---|---|---|
| ம.சா.ஆ.15 | 08.04.2022 | நத்தம் கூட்டு பட்டா எண்.554 | அசல் |
| ம.சா.ஆ.16 | 29.03.2022 | வீட்டு வரி ரசீது | அசல் |
| ம.சா.ஆ.17 | 31.03.2022 | வீட்டு வரி ரசீது | அசல் |
| ம.சா.ஆ.18 | 31.03.2022 | குடிநீர் கட்டண ரசீது | அசல் |
| ம.சா.ஆ.19 | 11.11.2019 | மின்கட்டண ரசீது | அசல் |
| ம.சா.ஆ.20 | – | மனு சொத்திற்கான புகைப்படம் | அசல் |
| ம.சா.ஆ.21 | 28.10.2022 | புகைப்படம் எடுத்ததற்கான ரசீது மற்றும் குறுந்தகடு | அசல் |
| ம.சா.ஆ.22 | – | மண்ணச்சநல்லூர் காவல் நிலையத்தில் அளிக்கப்பட்ட புகார் மனு | நகல் |

**எதிர்மனுதாரர்கள் தரப்பில் சாட்சிகள்:–** இல்லை.

**எதிர்மனுதாரர்கள் தரப்பில் சான்றாவணங்கள் :–**

| வ.எண் | தேதி | ஆவணங்களின் விவரம் | குறிப்பு |
|---|---|---|---|
| எ.ம.சா.ஆ.1 | – | மனு சொத்தின் புகைப்படம்(எண்ணிக்கை 2) | அசல் |
| எ.ம.சா.ஆ.2 | – | வீட்டுவரி ரசீது(எண்ணிக்கை 4) | அசல் |
| எ.ம.சா.ஆ.3 | – | பால் கணக்கு அட்டை | நகல் |
| எ.ம.சா.ஆ.4 | – | மனு சொத்தின் புகைப்படம்(எண்ணிக்கை 5) மற்றும் குறுந்தகடு | அசல் |
| எ.ம.சா.ஆ.5 | 10.11.2022 | தூய அடங்கல் பதிவேடு | அசல் |

| | | | |
|---|---|---|---|
| எ.ம.சா.ஆ.6 | – | புகார் மனுவின் விவரம் | கணினி நகல் |
| எ.ம.சா.ஆ.7 | – | புகார் மனுவின் விவரம் | கணினி நகல் |

/உண்மை நகல்/

S.RAJKUMAR Digitally signed by S.RAJKUMAR

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
இலால்குடி.